Let us all in our own small way work for the future growth of Mahajana. That and that alone can please him more than anything else.

*A. Ratnam*
*Lecturer, Polytechnical Institute, Jaffna*

# THE DAWN OF A GOLDEN ERA

*T. T. Jayaratnam, son of an illustrious father took up the stewardship of Mahajana at the early age of 32. His dedication to education made the task of building up the school his sole ambition in life. Mr. Jayaratnam inherited from his father his versatility and the noble spirit of service, which earned for him the gratitude and good-will of the public.*

*I assumed duties as a teacher at Mahajana in the year 1926 and retired in the fulness of time in 1965. So I am in a position to know the many difficulties that confronted the father and the son. For Mr. Jayaratnam life was not a bed of roses. The untimely death of his father cast on his young shoulders a great burden. The ways of God are mysterious and Mr. Jayaratnam joined Mahajana as a teacher. This proved to be a great blessing not only to Tellippalai and its adjoining villages, but also to many other parts of Ceylon. The death of Mr. K. Chinnappah in 1945 came as a great shock to Mr. Jayaratnam, on whom fell the mantle of responsibility. His period of principalship covered a little over quarter of a century. The history of these twenty-five years deserves to be written in letters of gold. The college distinguished itself both in the academic and other spheres of activity. In fact the school became the envy of many older and better endowed schools. As a Principal he had the intuition to select the right man for the right job. He never swerved from the path of duty and this enabled him to get the co-operation of the parents and the public. Moreover Mr Jayaratnam watched the interests of all the students and kept in touch with them even after they had left school. I would also like to stress the religious fervour of Mr. Jayaratnam. He is a great observer of Hindu Culture and rites and whenever he launched on any task whether great or small he invoked the benediction of Lord Shiva. His unceasing activity was infectious and his assistants became his willing co-workers. The* **espirt de corps** *that prevailed at Mahajana during his regime captured the hearts of all. It is sad to think that he had to retire under the new dispensation of the government. If he had been allowed to continue till his sixtieth year he would have accomplished much more. He had his plains for an up-to-date laboratory, a larger campus and a hostel with all modern facilities, a little away from the college premises. In concluding this article I thought of the following lines from a poem written by him for the Silver Jubilee Number of the Mahajanan.*

"If you can fully trust that all you do
Is e'er directed by the Hand of Heaven
If you with truth can tread Great Duty's way
Using the leav'n of love that all doth leaven
And at God's feet the fruits of your toil lay."

*C. Sinnathurai* B. A.
*Formerly of the Staff*

# உள்ளத்தில் உள்ளான்

இலங்கையிலுள்ள ஆசிரியர்கள், அதிபர்கள் வரலாற்றிலே எமது அதிபரின் சேவை பொன்னெழுத்துக்களாற் பொறிக்கப்பட வேண்டியதொன்ருகும். மகாஜன வரலாற்றில் இப் பெரியாரின் காலப்பகுதி பொற்காலமென்றுல் அது மிகையாகாது. பாலப்பருவம் தொட்டு இளைப்பாறுகை பெற்ற காலம்வரை ஏறக்குறைய அரை நூற்ருண்டு மகாஜன வேறு, தாம் வேருகாமல் பின்னிப் பிணைந்து தமது வாழ்வை அந் நிறுவனத்திற்கே அர்ப்பணித்தார்.

எமது கல்லூரி முதல்வரின் தந்தையாம் செந்தமிழ்ப் பாவலர் அமரர் தெ. அ. துரையப்பாபிள்ளை அவர்கள், இந்து மாணவர்கள் இந்துச் சூழலிலேயே கல்வி பெறல் வேண்டும் என்ற குறிக்கோளுடன் பலவகை இடுக்கண்களுக்கூடே மகாஜனவை நிறுவினுர். அமரர் அவர்களின் இலட்சியத்தினை நன்குணர்ந்த தனயன், அவரின் உள்ளக் கருவூலங்களை மகாஜனவில் பிரதிபலிக்கச் செய்து இலங்கைவாழ் மக்களின் உள்ளங்களிலெல்லாம் உளனுகியுள்ளார். மகாஜனவில் ஆசிரியப்பணி யாற்றிய காலத்தில் தந்தையிட்ட அத்திவாரத்தின்மீது மாணவர்களின் உடல், உள, மெய்ப்பாட்டு வளர்ச்சிகளுக்குத் துரித வேகத்தில் ஏற்ற வசதிகள் அளித்த பெருமை திரு. தெ. து. ஜயரத்தினம் அவர்களையே சாரும். மகாஜனவில் முதல் விளையாட்டுத்துறை முதல்வராகவும், முதல் சாரணர் ஆசிரியராகவும், முதல் இல்ல இயக்குநராகவும், 'மகாஜனன்' சஞ்சிகைக்கு முதல் பத்திராதிபராகவும், முதல் இல்ல ஆசிரியராகவும் கடமையாற்றினுர்.

"இதனை இதனல் இவன்முடிக்கு மென்ருய்ந்து
அதனை அவன்கண் விடல்"

என்ற குறள் வாக்குக்கிணங்க முன் வகித்த பொறுப்பினை மற்றைய ஆசிரியர்களிடம் ஒப்படைத்து மகாஜனச் சுமையைத் தாங்கும் பெரிய பொறுப்பாம் அதிபர் பதவியை ஏற்று அப்பதவிக்கு உயர்வு அளித்தார்.

இப்பெரியார் காலத்திற்ருன் கால் ஏக்கர் நிலப்பரப்பு மூன்றேகால் ஏக்கராக விசாலமடைந்தது. கட்டிடங்கள் விசாலமடைந்தன. மாணவர்களின் தொகை பெருகியது. பாடவிதானங்கள் பல்கிப் பெருக்க மடைந்தன. வகுப்பறைகள் அதிகரிக்கப்பெற்றன. கலைக்கூடங்கள் மாணவர்களின் கலை உள்ளங்களுக்கு வித்தாகின. விளையாட்டு மைதானம், திறந்த வெளியரங்கு, வாசிகசாலை, விஞ்ஞான ஆய்வு கூடம், தொழிற் கூடங்கள், விடுதிச்சாலை, ஆலயம் என்பன நவீன முறையில் செப்பனிடப்பெற்றன. இருமாடிகொண்ட கட்டிட மண்டபமொன்று இன்றியமையாததெனக் கண்ட எங்கள் அதிபர் 1954ஆம் ஆண்டு ஒரு களியாட்ட விழா நடாத்த ஒழுங்குகள் செய்தார். தமது உடல்நலக் குறைவையும் பொருட்படுத்தாது மலாயா சென்று பழைய மாணவரிடமும் நன்கொடையாளரிடமும் பணம் திரட்டினர். அதனுற்ருன் இன்று வானளாவ உயர்ந்த மேன்மாடி மண்டபம் நம்முன் தோற்றமளிக்கிறது. ஆகவே, மகாஜன உயர் பாடசாலை அதிவிசேட தரத்திற்கு உயர்த்தப் பெற்றது. இதற்கு மூலகாரணமாக விருந்த எமது அதிபரை எங்ஙனம் மறக்கமுடியும். இப் பெருமகனுர் இட்ட முதல் பிழைக்காது, நன்முதலாகவே விளங்கிப் பல்கிப் பெருகிப் பூத்துக் குலுங்குகிறது.

பல்கலைக்கழகப் படிப்பினை எட்டியும் பார்க்க முடியாத கிராமப்புறத்து மாணவர்கள் பலரை ஆண்டுதோறும் இலங்கைப் பல்கலைக் கழகத்திலுள்ள மருத்துவத்துறை, பொறியியற்றுறை, விஞ்ஞானத் துறை, கலைத்துறை, தொழில்நுட்பத்துறை முதலிய வற்றிற்கு அனுப்புகிற மகாஜன எம்மத்தியில் இருப்பது தெல்லிப்பழை செய்த தவமேயாகும்.

ஒரு பாடசாலை வாழ்க்கையில் வெள்ளி விழா, பொன்விழா, வைரவிழா ஆகிய மூன்றினையும் ஒருங்கே தம் சேவைக்காலத்தில் காணப்பெற்ற அதிபர் ஒருவர் இருப்பாரேல், அவர் எமது அதிபர் திரு. தெ. து. ஜயரத்தினம் அவர்களேயாகும் எனத் துணிந்து கூறலாம். தம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் மகாஜனவிற்கே நல்கி திரிகரண சுத்தியோடு அந்நிறுவனத்தின் உயர்ச்சிக்கு வழிகோலிய மகாஜனவின் சிற்பியாம் எமது அதிபருக்கு நாம் செய்யும் கைம்மாறு யாது உளது? மகாஜனவின் இலட்சியத்திற்கும் பாரம்பரியத்துக்கும் எமது அதிபரும், நிறுவியவரும் எங்ஙனம் தம் உழைப்பை நல்கினர்களோ அவ்வழியில் நாமும் உழைத்து அவற்றைப் பேணிக் காப்போமாக.

எமது அதிபரும் அவர் குடும்பமும் சகல செல்வங்களுடனும் சுகத்துடனும் வாழ எல்லாம் வல்ல இறைவன் அருள் பாலிப்பாராக.

வை. பொன்னையா

(பெற்ருரும் பழைய மாணவனும்)

சேர் யோன் ராபாற் வெற்றிக்கேடயத்துக்கான
அகில இலங்கைப் பாடசாலைகள் உதைபந்தாட்டச் சங்கப் போட்டி
முதற் பிரிவு வெற்றிவீரர் — 1971



யாழ். பாடசாலைகள் விளையாட்டுச் சங்க உதைபந்தாட்டப் போட்டி
முதற்பிரிவு வெற்றிவீரர் — 1971
வெற்றி விருதுத் தொடர் — ஐந்தாம் ஆண்டு



யா. பா. வி. ச. முதற்பிரிவு உதைபந்தாட்ட வெற்றி வீரர் — 1972
வெற்றி விருதுத் தொடர் — ஆறும் ஆண்டு



யா. பா. வி. ச. மூன்றும் பிரிவு உதைபந்தாட்ட வெற்றி வீரர் — 1970



யா, பா. வி. ச. மூன்றும் பிரிவு ஃகொக்கி வெற்றி வீரர் — 1976



யா. பா. வி. ச. இரண்டாம் பிரிவு உதைபந்தாட்ட வெற்றிவீரர் — 1972



யா. பா. வி. ச. இரண்டாம்பிரிவு உதைபந்தாட்ட வெற்றிவீரர் — 1973



# Second Eleven Soccer Champions J. S. S. A. — 1967

UNBEATEN TEAM IN THE NORTH



**Seated :** *The Principal, A. Jegasothy, P. Kugathasan (Captain), K. Sivakumaran, R. Navaratnam, A. Jogaratnam.*

**Standing :** *A. Skandarajah, T. Kanageswaran, P. Tharumakulasingam, S. Kumarasamy, S. Chandralingam, V. Thavarajasingam, K. Kamalanathan, R. Rajasingam.*

## First Eleven Soccer Champions J. S. S. A. — 1964



**Seated:** *The Principal, Mr. T. P. Pathmanathan, S. Thirugnanasampanthar (Captain), N. Jegatheeswaran, R. Selvarajah, Mr. V. Shivasubramaniam.*

**Standing:** *K. Mahalingam, K. Navaratnasingam, A. Loganathan, N. Ganeshamoorthy, K. Kailasaratnam, K. Vinayagamoorthy, K. Sathianathan, V. T. Mahalingam, K. Singaram.*

# ஒளிவீசும் ஒப்புயர்வற்ற இரத்தினம்

நான்கு வருடங்களுக்கு முன்னர் மகாஜனக் கல்லூரியிற் சேர்ந்த யான், எங்கள் அதிபரைப்பற்றி அதிகம் அறியா நிலையிலிருந்தேன். வெண்மை உடையலங் காரத்திற்கொப்ப, புன்சிரிப்புடன் கூடிய கம்பீரமான அவரது தோற்றமும், அன்பு மொழிகளும், கல்லூரியில் அவரது நிர்வா கமும் என்னை அவர்பால் ஈர்த்துக்கொண் டன. நான் மாணவ தலைவனுகத் தேர்ந் தெடுக்கப்பட்டபோது அவருடன் அளவ ளாவ ஓரளவு வாய்ப்புக்கிடைத்தது. சென்ற ஆண்டில் சிரேட்ட மாணவ தலைவனுகத் தேர்ந்தெடுக்கப்பட்ட எனக்குக் கல்லூரி ஒழுங்குகள் பற்றி அவருடன் அடிக்கடி கலந்துகொள்ள வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. இதனல் அவரை ஓரளவு என்னுல் முற்றுக உணர முடிந்தது.

ஒழுக்கத்தின் தந்தையும், இருப்பிடமு மான உயர்திரு. தெ. து. ஜயரத்தினம் அவர்கள் அதிபர் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற ஞான்று, கல்லூரியின் சிரேட்ட மாணவ தலைவனுக இருந்த நான் அவரது சேவைபற்றி வெளியிடும் மலருக்கு அறிக்கை ஒன்று அளிக்கக் கிடைத்த சந் தர்ப்பம் பெற்றமையாற் பெரு மகிழ்ச்சி யடைகிறேன். கல்லூரியின் புகழுக்கும், வளர்ச்சிக்கும் தூண்களாக அமையும் ஒழுக்கம், கலை, கலாசாரம், விளையாட்டு முதலியவைகளில் ஒவ்வொன்றையும் பலப் படுத்தும் நோக்கமாக ஒருவர் எடுத்துக் கொள்ளும் ஒழுங்கான படிப்படியான முயற்சிகளினுல் கிடைக்கும் நற்பயனே ''முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்'' எனும் முதுமொழிக்கு ஆதாரமாக நிற்கக் காணலாம். அரும்பெரும் குணங்களும், அவற்றைக் கட்டிக் காக்கும் மெய்யறிவும் மிகுந்த எங்கள் அதிபரைப் பற்றி அறிவிலும் ஆற்றலிலும் மிகக் குறைந்த நிலையிலுள்ள யான் எடுத்துக்கூறுவதற்கு என்ன இருக் கின்றது!

மனிதன் மனிதனுக வாழ முக்கிய மாகத் தேவையானது ஒழுக்கம்தான்.

''ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.''

எனும் வள்ளுவப் பெருந்தகையின் மணி வாக்கும் இதையே எடுத்தியம்புகின்றது. கல்லூரியில் கல்வி பயிலும் எல்லா மாணவ மாணவிகளும் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பைப் பெற்றுவிட மாட்டார்கள். பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பைப் பெற்றவரும், பெருதவருமாகிய இரு சாராரும் தமது பிற்கால வாழ்வைப் பண்பும், பயனுமுடையதாக அமைத்துக் கொள்ளல் வேண்டும். '' உங்களில் எத்தனை பேர் வைத்தியராகவோ, பொறியியலாள ராகவோ வருவீர்கள் என்பதுபற்றி எனக் குக் கவலையில்லை; ஆனுல் இக் கல்லூரியி லிருந்து வெளியேறும் ஒவ்வொருவரும் தத்தமது வாழ்வைப் பண்பும், ஒழுக்கமும் நிறைந்ததாக அமைத்துக்கொண்டால் அதுவே எனக்குப் போதுமானதாகும்,'' என்று அதிபர் ஒருமுறையன்று, பலமுறை எங்களுக்குக் கூறியுள்ளார். இது, அவர் மாணவர்களது ஒழுக்கத்தின்மேற்கொண்ட ஆர்வத்தை எமக்கு எடுத்துணர்த்துகின் றது. இப்படியாக ஒழுக்கத்தின்பாற் கொண்ட பற்றுதல் காரணமாக அவர் அதனைக் கட்டிக் காக்க வியத்தகு பல வழிவகைகளை மேற்கொண்டிருந்தார்.

ஆற்றலும், திறமையும், ஊக்கமும் கொண்ட இப்பெருந்தகையாளர் எங்கள் மாணவதலைவர் குழாத்திற்குத் தலைவராக வும், தந்தையாகவும், தெய்வமாகவும் இருந் தார். கல்லூரியில் நடைபெறும் எந்த ஒரு விடயத்திலும் ஒழுக்கத்தை எதிர்பார்க்கும் இவர், எங்கள் குழாத்தின் நடத்தை யிலும் அதனை எதிர்பார்த்தார். நாங்கள் தேவை யேற்படும் வேளைகளில் முக்கியமா கக் கல்லூரி வைபவங்கள் நடைபெறுவதற்கு ஓரிரு தினங்களின் முன்பாக அவரது தலை மையில் கூடுவோம். அவ்வைபவங்களில் நிலைநாட்ட வேண்டிய ஒழுங்கு முறைகள் பற்றி அவர் கூறுவார். இக் கூட்டங்களில் எல்லா மாணவ மாணவிகளுடனும் இன் முகத்துடன் பேசுவார். கல்லூரியிலும், கல்லூரி வைபவங்களிலும் ஒழுங்கை நிலை நாட்ட அவர் கூறும் அறிவு முதிர்ந்த கருத்துக்கள், வழிவகைகள் என்பவை வேறு எந்தவித மாற்றமைப்பும் செய்ய வியலா நிலையிலிருப்பனவாக நாம் உணர் வோம். குறிப்பாகக் கல்லூரி வைபவங்களில் ஏற்படக்கூடிய சிக்கலான பல நிலைகளிலும் ஒழுங்கை வெகு இலகுவாக நிலைநாட்டக்

கூடிய வழிவகைகளை வைபவம் ஆரம்பிக்கு முன்னரே எடுத்துரைப்பதில் இவருக்கு நிகர் இவரென்றே கூறவேண்டும். அவ்வவ் வைப வங்களில் அவர் கூறிய அதே சிக்கல்கள் ஏற்படும்போது நிறைந்துநிற்கும் அவரது நீண்டகால அனுபவமும், ஆற்றலும், திற மையும் ஒளிரத் தொடங்கி எம்மை யெல லாம் வியப்பிலாழ்த்திவிடும்.

மாணவர்களின் படிப்பைப் பொறுத்த மட்டில் அவர் மிகவும் கண்டிப்பானவர். காலத்திற்குக் காலம் மாணவர்களுக்குக் கல்வியில் ஆற்றலை ஊக்கக்கூடிய பல புதுப் புது வழிகளை ஆசிரியர்களின் உதவியுடன் ஏற்படுத்தி மாணவர்களைக் கல்வியில் ஈடு பாடுடையவராக ஆக்கிவிடுவார். மாண வர்களுக்குக் கூட்டங்களில் அடிக்கடி அவர் கூறும் ஒரு கருத்து என் மனத்தில் நிற்கிறது. ''ஒருவன் ஒரு குதிரையை நீர் பருகச் செய்ய அதன் தலையை அதன் வாய் நீரிற் படும்படி அமிழ்த்தி மட்டுமே பிடிக் கலாம். பலாத்காரமாகவோ வேறு முறைக ளாலோ அதனை அவன் நீர்பருகச் செய்து விட முடியாது. நீரைக் குடிப்பது குடிக்கா மல் விடுவது குதிரையைப் பொறுத்த தாகும்.'' இவ் விளக்கம் மாணவர்களின் கல்விக்கும் பொருந்தும் என அதிபர் தமது கருத்திற் கூறுவார்.

மகாஜனக் கல்லூரி கல்வி, ஒழுக்கத்தில் மாத்திரமல்ல, விளையாட்டிலும் இலங்கை யின் தலைசிறந்த பாடசாலைகளின் பட்டிய லில் தனக்கென ஓர் இடம் அமைத்து நிற் கிறது. இவ்வருட முற்பகுதியில் யாழ்ப் பாணத்தில் நடைபெற்ற அகில இலங்கைப் பாடசாலைகளுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் மகாஜனக் கல்லூரி முதலிடத் தைப் பெற்றமையை இவ்விடத்திற் கூறிக் கொள்வதிற் பெருமை கொள்கிறேன். நானும் எங்களது கோஷ்டியின் ஓர் அங்கத் தவன் ஆதலால் எங்களது கோஷ்டி பற்றி, — அதாவது வெற்றிக்குரிய காரணம் பற் றிச் சில வார்த்தைகள் கூறலாமென விழை கிறேன். எங்கள் அதிபர், கோஷ்டியின் ஒவ்வொரு வீரனைப்பற்றிய சரித்திரத்தை யும் அறிந்திருந்தார். கோஷ்டியின் நடத் தைகள் பற்றி அவர் எங்களுக்குக் கூறும் போது ''எந்த ஒரு கோஷ்டியும் விளை யாட்டைப் பொறுத்தமட்டில் நன்றாக விளையாடி வெற்றி பெற்றுவிட்டால் மாத் திரம் போதாது. கோஷ்டியின் வீரனெவ் வொருவனும் நல்ல பழக்கவழக்க முடையவ னாக, சகோதர மனப்பான்மை மிக்கவனாக விளங்கவேண்டும். விளையாட்டில் குறை வான நிலையிலிருந்தாலும், மேற்கூறிய தன்மைகளைப் பெற்று நிற்கும் கோஷ்டியே மக்களிடையே நன்மதிப்பைப் பெற்று நிலைத்து நிற்கும். எனவே, கோஷ்டியின் ஒவ்வொரு வீரனும் விளையாட்டை ஒழுக்கத்தைப் பேணி நல்ல சுபாவமுடை னாக இருக்கப் பழக வேண்டும். சகோதரத் துவத்தை வளர்ப்பதே விளையாட்டுகளின் முக்கிய, அடிப்படையான நோக்காகும்'' என்றெல்லாம் நிறைய அறிவுரைகள் வழங்கி இருக்கின்றார். இப்படியான ஒழுங்கை எமது கோஷ்டி நிலைப்படுத்தி, திறமையாக விளை யாடியமையினாலேயே எங்களது கோஷ்டி யின் புகழ்க்கொடி இன்றும் இலங்கை யெங்கும் வானளாவப் பறந்து கொண் டிருக்கின்றது. வரும் ஆண்டுகளிலும் இவ் வெற்றியை எமது கோஷ்டிகள் பெறும் என்பதே எனது திண்ணமான எண்ணம்.

எனது அபிப்பிராயப்படி அன்னாரது அதிபர் பதவியின்கீழ் இக் கல்லூரியில் கல்வி பயின்ற எல்லா மாணவ மாணவியரும், ஏன், அவரது மேற்பார்வையின்கீழ்க் கல்வி கற்பித்த எல்லா ஆசிரியர்களும்கூட முற் பிறவியில் ஏதோவிதமான புண்ணியம் செய்தவர்கள் என்றே கூறவேண்டும். அதிபர் அவர்களின் சேவை பற்றிய புகழ் இலங்கை யெங்கும் பட்டொளி வீசிப் பறக்கின்றது. ஆம்! நாலா பக்கங்களுக்கும் ஒளியை அள்ளியெறிந்து பிரகாசித்துக் கண்கூசச் செய்யும் இயல்புள்ள வைரத்தை எவ்விடத்தில் வைத்தாலும், அது தொடர்ந்து ஒளிர்ந்து கொண்டே இருக்கும். கல்லூரியுடன் மட்டும் ஒன்றியிருந்த இவரது சேவை இலங்கையெங்கும் வியாபித்துப் பரவ, இயற்கை செய்த திருவிளையாடல் தான் இவர் ஓய்வுபெற்றமை. மாணவ உல கிற்கு இவர் செய்த சேவைகள் சொல்லி லடங்காதவை. உயிருடன் ஒன்றிவிட்ட சேவைசெய்யும் இவரது தியாக உணர்வு, இவரை நன்னிலைக்கு உயர்த்தும் என்பது எனது அசைக்கமுடியாத நம்பிக்கை. இப் பெருந்தகையாளர் வருங்காலங்களிலே எல் லாப் பேறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ எல்லாம் வல்ல இறையை வேண்டி நிற் கிறேன்.

க. மோகனராம்
(சிரேட்ட மாணவ தலைவன்)

# சுந்தர அதிபரேரே!

— நா. சண்முகலிங்கம் —

அன்ன சத்திரம் ஆயிரம் அமைத்தலிலும்
ஆங்கோர் ஏழைக்கு அறிவூட்டல் மேலென்றே
சொன்ன கவிச்சொல்லைச் சிறிதேநரம் எண்ணிடுவோம்
ஆயிரமா யிரம்பேரின் அறிவுப் பசிதீர்க்கும்
அற்புதமாந் தன்மையினுக் கிணைதா னுண்டோ ?

தூயநல் நெஞ்சந் தன்னில் துணிவுகொண் டிருந்த தாலே
ஆயநற் கலைகள் தம்மை ஆர்வமாய் வளர்த்தே எங்கள்
மேவுமா சனக்கல் லூரி மேன்மையை உலக மெல்லாம்
ஏமுறப் பரவச் செய்தாய்; சீரிய கலைக ளுள்ளே
நாடகக் கலையை மெத்த நயம்பட வளர்த்துப் பெற்ற
ஈடிலாப் பரிசின் மேன்மை எடுத்தெடுத் தியம்பப் போமோ?
நாடதை அறியு மன்றோ?

ஆயநுண் கலைக ளெல்லாம் அளிக்கின்ற கூடம் தன்னைக்
கோயிலென் றழைப்ப ரன்றே குழந்தைகள் சமயக் கல்வி
தூயநன் னெறியிற் செல்லச் சுந்தர அதிப ரேறே
கோயிலொன் றமைத்தா யன்றே கும்பிடு கின்றோம் நாமே!

தமிழரைக் கட்டி யாள்தல் சங்கடம் பெரிதென் பார்கள்
கமழ்புகழ் கற்ற செல்வர் காரிய வீரர் மற்றும்
அமைகலை வளர்க்கு மான்றோர் அனைவரு மமர்ந்த ஆசி
ரியர்குழு தன்னைக் கட்டி,
தமரென அன்பு காட்டித் தனிப்பெருஞ் சாலை தன்னைப்
புகழுடன் நடத்தி னாயே! புதுமையுன் ஆற்ற லையா!

ஆங்கிலம் புகட்ட வல்ல ஆற்றலைக் கூறு வோமோ?
தாங்கிநின் தந்தை மேன்மை தழைத்திடச் செய்த பான்மை,
ஓங்கினர் உழைப்பி னாலே ஊர்தொறும் சென்று சென்று
உயர்நிதி திரட்டி வந்து,
பாங்குறு பாட சாலை தன்னைநீ பாடு பட்டுப்
பல்கலைக் கழக மாக்கிப் பாரினில் விளங்கச் செய்த
நல்லியற் சேவை தன்னை நாமெடுத் துரைக்கப் போமோ!

சொத்தெலாம் பொதுச்சொத் தாக்கி இத்தரை மாந்தர்க் காக
மெத்தவே உழைத் துழைத்து மேன்மைகொள் கல்விச் சாலை
வைத்தபேர் துரையப் பர்தம் மனத்தினைக் குளிரச் செய்த
வித்தக ஜயம் விளங்கும் ரத்தின! இறைஞ்சு கின்றோம்.

உள்ளத்தின் பண்பாலே உயர்ந்திட்ட உத்தமன்நீ
வெள்ளையுளங் கொண்டதனல் வெற்றிபல கண்டவன்நீ
அன்பின் பிறப்பிடம்நீ ஆதலினுல் உன்னுடைய
என்பும் பிறர்க்காய் ஈந்துபணி செய்பவன்நீ.

பதவிகள் பட்டம் வந்தால் பண்பதை விட்டே நம்மோர்
உதவிகள் செய்தல், மற்றும் உண்மையை மறத்தல் கண்டோம்
பதவிகள் பட்ட மேறப் பணிந்திடும் பெருமை தன்னைப்
பண்புடை நாய காஉன் கண்ணிய வாழ்விற் கண்டோம்.

மன்னவர் தமையு மீர்க்கும் நின்னரும் தோற்ற மேற்று
நிதம்நிதம் நெஞ்சம் ஆர்க்கும்
புன்னகை கவலை தீர்க்கும் புரிநடை உறுதி சேர்க்கும்
என்னிட ரெமக்கிங் கையா! இணையிலாக் குருவி டத்து
நன்னடை பயிலப் பெற்ற நாமிறு மாப்ப டைந்தோம்.

ஓய்வுதான் பெற்ற போதும் ஊர்நலம் குறித்து நாளும்
தாயெனச் செய்யும் சேவை தணிந்திடாய் தந்தை யேநீ
தூயநற் றுணைவி யோடு சுந்தரப் புதல்வர் சூழ
ஆயநற் சுகங்கள் பெற்றே ஆண்டுகள் பல்கி வாழி!

⁂

## மகாஜன மதிப்பேட்டிலிருந்து

*இப் பெருமக்கள் கல்லூரியைக் காணப்பெற்றேம். பெரும் பொருளுண்மையைப் பேசினேம். கல்லூரி முதல்வரும் துணை முதல்வரும் பேராசிரியப் பெருமக்களும் மிக்க அன்பு காட்டி மகிழ்வித்தார்கள். மாணவர்கள் அடக்கம் முதலியவற்ருல் சிறந்து விளங்கினர்.*

*இக் கல்லூரி மேன்மேல் வளர்ந்து பெரும் பயன் விளைத்தினிது நடந்து கொண்டு விளங்கும். இது திண்ணம்.*

— சிவம்

## M. Vamadevarajah



CAPTAINED THE ALL CEYLON SCHOOLS HOCKEY TEAM
IN 1966

## R. Mahendra




VICE-CAPTAIN OF THE ALL CEYLON SCHOOLS
HOCKEY TEAM — 1970

# TO SIR WITH LOVE

*I joined Mahajana College in the year 1969; but I had heard of its great name and fame long before. Many people spoke in glowing terms of the Principal of Mahajana College and its achievements. I longed to see him. Still more I wanted to study in the school that was run by him. It was with great awe and respect that I entered the precincts of Mahajana College. There was an atmosphere of calm as the children returned from the College after their morning prayers.*

*I asked one of the students where I could see the Principal. He pointed out to Mr. Jayaratnam who was himself returning from the temple. When he entered the office, I approached and greeted him in a faltering voice, 'Good morning Sir.' He returned the greetings in a sweet manner and the opinion I was given about him was confirmed. He gave me confidence and sent me with the peon to one of the Advanced Level Classes to study Science.*

*From the very outset I was quite at home at Mahajana. Our Principal is not only active in himself but is the cause of Activity in others. He scorned idleness and dilly-dallying. He wanted us to be complete men. He appreciated smartness, honesty, a keen sense of duty and hard work. From the very start I was a hosteller at Mahajana. He took a deep interest in the activities of the hostellers and their well-being. Very often he paid visits to the hostel and knew all about every hosteller. From what I knew of Mr. Jayaratnam he is a great administrator and educationist. Those of us who had been lucky to be at Mahajana will always remember him with kind thoughts and gratitude. As one who has entered the University from Mahajana I shall always cherish the utmost regard for our beloved Principal.*

*Mohamed M. M. Jameel*
*President, Science Association*

உ
சிவமயம்

# தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அதிபராகக்

**கடந்த இருபத்தைந்து ஆண்டுகள் அரும்பெரும் பணிபுரிந்த**

## திருவாளர் தெ. து. ஜயரத்தினம், B. A. (Lond.), J. P.

அவர்கள் இளைப்பாறுங்காலை

**கல்லூரி உயர்தர மாணவர் மன்றங்களால் வழங்கப்பட்ட**

# பாராட்டு மடல்

**உ**லகினிலே பலபேர்கள் தோன்றிடுவார். எனினும், உயிர் உள்ள காலத்தில் உள்ளபடி வாழ்பவர்கள், உண்மையில் மிகச் சிலரே. தாமுண்டு தமதென்று தனிவாழ்க்கை வாழாமல் ஊருண்டு, உலகுண்டு என்று உண்மை நெறிதனிலே, சீர்கொண்ட தொண்டாற்றிச் சிறந்திடுவோர் மிகச் சிலரே.

**துரையப்பவள்ளல் தரவந்த இரத்தினமே,**

உலகுக்காய் வாழ்கின்ற உத்தமர்கள் மத்தியிலே, திலகம் எனத் திகழ்ந்தார் தீரர் **துரையப்பர்.** துரையப்பர் உயர்சேவை உரைகட்கடங்காது. அவர் தந்த பெருஞ் செல்வம், அவரே நம் **ஜயரத்தினம்.** தந்தையார் தந்திட்ட இந்த உயர்மகனின் விந்தைமிகு சேவை விதந்துரைக்க அடங்காது. என்றாலும், எமதுள்ள உணர்ச்சிக ளிங்குரையாகும்.

**தந்தைவழி நிற்குந் தனய,**

கல்லூரி வளர்ச்சியை உன் கண்போல் மிகக் காத்தாய். உன்னுயிரை அதில் வைத்தே உயர்சேவை பல செய்தாய். தந்தைதரு சிறு பள்ளி தாரணியில் உயர்ந்தோங்க, உள்ள துடிப்போடு உழைத்தாய் பெரிதாக. பள்ளி வளர்ச்சிக்காய்ப் பணம்சேர்க்கும் வேளையிலுன் வெள்ளையுளம் கண்டே அள்ளிக் கொடுத்தார்கள். உன்னுள்ளத்து உயர்வாலே உயர்ந்தது நம் கல்லூரி.

**ஆண்மை நிறைந்த ஐயனே,**

நின்னரிய தோற்றமும், நின் புன்னகையின் ஆற்றலும் என்னென்ன கதை பேசும்! எல்லாமே காவியந்தான். அன்னநடை அழகென்று சொல்லிடுவார். ஆனாலும் உன் நடையோ உரைக்கின்ற உறுதிக்கோர் இணையில்லை. கண்களிலே வீசும் கருணை ஒளியாலே, எங்களையெல்லாம் ஆட்டி எமைக் கடமைசெய வைத்தாய்.

**ஒழுக்கத்தோடிணைந்த கல்வி அளித்த ஒப்பிலாப் பெரியோய்,**

அறிவுப்பசி தீர்த்தே ஆயிரமாயிரம் பேரின் வறுமைதனைத் தீர்த்தாய்; வளர்ந்தோர் பல ருன்னால், பொறியியலில், மருத்துவத்தில், போற்றும் கலைத்துறையில் உயரியதாய்ப் பல பேர்கள் ஓங்குவதற்கு வழிசெய்தாய். கல்வியிலேயல்லாத கவினுர் பிறதுறையில், எல்லை யிலாப் புகழ்காண என்றென்றும் நீயுழைத்தாய். நாடகமா? விளையாட்டா? நமக்குப் பயன் செய்யும் நல்லனவெல்லாம் வகுத்தே நாமுயர வழிசெய்தாய். இன்றெமது கல்லூரி இலங்கைப் பல்கலைக் கழகம் என்ன வளர்ந்தது கண்டு உன்னை, உனதுயர்வை உரைக்காதவ ருண்டோ?

## Felicitations to our Principal when he was made a J. P. in 1967

### At Dinner at Palm Court with his Colleagues.

*P. T. A. Secy.*
*thanks the Guests*
*at*
*a public meeting*

*The Chief-Guest*
*thanks*
*His colleagues*

*and*

*Greetings in a*
*Silver Casket*
*from the President,*
*Teachers' Guild*

*The Public*

### Tea in Progress



**மங்கல மனைமாட்சி பெற்ற மாண்புடைத் தலைவ,**

உத்தம, உன் பணிக்கெல்லாம் உறுதுணையாய் இருந்திட்ட சத்தியமாம் நின்துணைவி சால்போ மிகப் பெரிதே. முத்தான செல்வங்கள் நீ பெற்றதிறையருளே.

**சாந்தி நிலவ அருள் சமாதான நீதிபதி,**

முந்தியடித்தே பட்டம் தனைவாங்கும் இந்த உலகின் இயல்புதனில் நீங்கி, உந்தனையே நாடியது உயர்வான பட்டமொன்று. சிந்தனைக்கும் எட்டாத நின் சிறப்பான சேவைக்கு இந்தவிதப் பட்டமெலாம் எந்தளவென் றுலகறியும். பட்டந்தான் உயர்ந்ததுவுன் பண்பான சேர்க்கையிலே. உன்னையறிந்தாய், **''உனை நீ அறி''** என்ருய். எம்மையறிந்தோம் நாமின்பம் மிகப்பெற்ருேம்.

**பாராட்டுரை பெறும் பண்புடை நாயக,**

அரச, உன் சேவைக் கெல்லாம் பரிசாய் எமதரசார் பணித்தார் உனக்கு ஓய்வே. உழைக்கும் உழைப்பாளிக்கு ஓய்வு அவசியமே. வாழ வழி தந்த பெரியோய்! நாமெல்லாம், தழைக்க வழிகாட்டுந் தலைவ! நீ நம்மோடு நீண்ட நெடுங்காலம் நீடூழி வாழ்ந்திட, நம் நெஞ்சம் திறந்திறைவன் நேர்பாதம் பணிகின்ருேம்.

**நீவிர் கொள்க ஜெயம்!**

**ஒளி எங்கும் வீசட்டும் இரத்தினம்!!**

*மகாஜனக் கல்லூரி,*
*தெல்லிப்பழை,*
*14-2-71.*

இங்ஙனம்,
**உயர்தர மாணவர் மன்றங்கள்**

⁕

## மகாஜன மதிப்பேட்டிலிருந்து

*இந்தக் கல்லூரி ஆரம்பகால முதல் இன்றுவரை வளர்ந்த சரித்திரத்தை நேரில் அறிந்தவர்கள் மிகச் சிலர். ஆனல் அவர்களுள் நானும் ஒருவன். 1910ம் ஆண்டில் இந்தக் கல்லூரி ஸ்தாபிக்க முன்னமே இதன் ஸ்தாபகர் திரு. தெ. அ. துரையப்பா பிள்ளை அவர்களை நான் அறிவேன். அந்தக் காலத்தில் கனம் துரையப்பா பிள்ளை அவர்களின் மாணவனயிருந்து கல்வி கற்றேன். அப்போது யாழ்ப்பாணத்துள்ள தலைமையாசிரியர்களுள் திறமைவாய்ந்தவராயிருந்தார். தமிழறிவும் ஆங்கில அறிவும் உடையார். சமுதாயக் கொள்கைகளிலும் முன்னேற்றக் கோலமுடையவராயிருந்தார்.*

*அவர் வாழ்க்கைச் செயல்களில் மகத்தானதாகத் துலங்குபவை இரண்டு. முதலாவதாக இந்தக் கல்லூரியை ஸ்தாபித்தது. விடாமுயற்சியோடும் பரந்த நோக்கத்துடனும் இப் பயிரை வளர்த்தெடுத்தார். அவருடைய இரண்டாவதான செயல் அவர் பெற்றெடுத்த புத்திரன் — தந்தை கட்டியதைப் பெருப்பித்தும் சிறப்பித்தும் வைத்த இக் கல்லூரி அதிபர் திருவாளர் ஜெயரத்தினமவர்கள். நமது ஊர்க் கிராமத்தில் சிறந்த கல்வியூட்டும் இந்த மாபெரும் ஸ்தாபனம் ஸ்தாபிக்கப்பட்டது எமது மக்களின் தவப் பலனேயாகும்.*

*மகாஜனக் கல்லூரி மேன்மேலும் மேலோங்கி வளர எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக.*

26-6-1966 S. J. V. செல்வநாயகம்

J - 10

உ

சிவமயம்

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில்

புகழ் படைத்த அதிபராய்

இருபத்தாறு ஆண்டு பணிபுரிந்து

கல்லூரி விடுதிச்சாலையின் போஷகராயும் திகழ்ந்த

திரு. தெ. து. ஜயரத்தினம், B. A., J. P.,

அவர்களைக் கௌரவித்து நிகழ்த்திய

பிரிவுபசார இராப்போசன விருந்து வைபவத்தின்போது வழங்கிய

# பாராட்டுரை மடல்

திருமிக்க நல்லோரின் திறம்போற்றல் மிகஇனிது,
பெருமைநலம் பேசுவதும் பேணுவதும் நம்கடனும்.

**மகாஜனப்பேர்க் கழகத்தை வகுத்தமைத்த மாண்புடையோய்,**
**ஜயரத்தினம் எனும்பேர் மருவியநற் செயலாள,**

இருபத்தைந்து ஆண்டின்முன் இக்கழகம் இருந்தநிலை கேட்டோம். ஒருபத்து யாண்டிற்குள் உயர்ந்தநிலை நீ தந்தாய். கருமத்தின் கண்ணுகிக் கருத்தெல்லாம் அதற்காக்கிக் காரியங்கள் நீ புரிந்தாய்; கதித்தது நம் கல்லூரி.

தந்தை துரையப்பர் தந்தளித்தார் ஒரு பள்ளி. விந்தை பல செய்ததனை மேனிலையில் நீ வைத்தாய். விண்ணுயர்ந்த மாடத்தில் விரித்துயர்த்துங் கொடியசைப்பால் அண்ணல், நின் தந்தையார் அகத்தாபம் அகற்றினை நீ. தந்தைவழி வந்த தருமநெறி போற்றல் மைந்தர் கடன் என்ற மனுவாக்குக்கு இலக்கியம் நீ.

**செயலாற்றல் மிகப்படைத்த சீராள,**

கட்டடங்கள் எழுப்பிடலாம்; கலைகள் புகுத்திடலாம்; உற்றிருக்கும் உயர்நிலையை ஓம்பலோ மிக அரிது. அரியதென்பது ஒன்று நினக்கு எளியதென யாம் கண்டோம். பன்னூறு நற் பணிகள் படைக்க மனம் பதித்தாய்; அந்நூற்றிற் சிற்சிலவே ஆண்டுதொறும் அமைத்தாய்; எந்நாளும் இத் தகவால் எம் கழகம் தன்னிலையில் முன்னேக்கி முன்னேக்கி முன்னேறும்படி வைத்தாய். நின்னேக்கும், செயல்முறையும் யாரறிவார்? நீ பெரியை.

உயர்தரக் கல்லூரிக்கு உறுப்புக்கள் பல வேண்டும். ஒரு விடுதிச்சாலை அதன் ஒரு விழி யென்று ஓதிடலாம். பதினைந்து யாண்டின்முன் பயன் நல்கும் ஒரு விடுதி, நிதி சேர்த்து நீ இயற்றித் தந்தாய்; நிலைத்தனம் யாம். சால்புமிகுந் தலைவர், சைவ சுத்த நல்லுணவு, நாலுவிதங்களிலே நற் பொழுதுபோக்குக்கள் எல்லாம் அமைத்தாய்; இனிமையுற்றேம் யாமெல்லாம்.

**சைவநெறி போற்றித் தமிழ் வளர்த்த சான்றேய்,**

தெய்வ அருள் சேராமற் சீர்க்கல்வி ஏருது. உய்தமிழில் வள்ளுவனர் உவந்துரைத்த கொள்கை இது. நீ பள்ளித் தலத்தினிலே, ஆடும் பெருமானுக்கு அழகார்ந்த கோயில் கண்டாய். தமிழர் கண்ட கலைப்பெருமான் கலைக்கழகத்தமர்தல் முறையென்று கொண்ட நின் கலையறிவின் ஆழந்தான் என்னே!

விடுதி வதிவு விழைவோர் விரும்பி யிறைபணி செய்ய அமைவுடைத்தாய் நீ விதிகள் ஆக்கிவைத்த திறந்தான் என்னே ! காலைப் பொழுதிற் கடவுளடி கைதொழுது கல்வி தொடங்கவென நீ அமைத்த கட்டுப்பாடுதான் என்னே !

விடுதிச்சாலையின் விழுப்பமிக்க புரவல,

செய்வன திருந்தச் செய்கின்ற செயலாற்றல்,
சொல்வன அறிந்து சொல்லும் தூய சொல்லுறுதி,
'இதனை இதனால் இவன் முடிக்கு மென்றாய்ந் ததனை அவன்கண் விடல்'

ஆகிய ஆட்சித்திறன் என்னும் இவை நின் அருளாண்மைக்குப் போதியன. ஆனால், அவற்றின் மேல் புன்னகைப் பொலிவால், இன்முகத்தியல்பால் நீ நின்னொப்பார் இலாத நெடும்புகழ் அதிபராம் நிலைமையில் உயர்ந்தாய்.

ஐயனே, அறிவுச் சுடரொளி வீசும் மெய்யனே,

விடுதிச்சாலை எம் வீடாகக் காட்டினாய்; வேதனைகள் அறநீக்கிப் போதனைகள் ஊட்டினாய்; தந்தையும் தாயுமாய்த் தலையன்பு நாட்டினாய். கண்ணிமைபோல் நீ காத்தாய் கலைக் கழகத்தை. தண்ணிழலாய்த் தங்கி யாம் வாழ்ந்தோம் இதனூடே. இன்னினிமேல் நும் போல் தலைவரை நாம் எய்தப்பெறுவோமா? அரிதினும் அரிது.

இளைப்பாறும் நிலைபெற்ற இன்னருட் பெரியோய்,

ஆக்கப் பணிசெய்ய ஆறுதல் அவசியமே. தன் எண்ணத் தொண்டாற்றத் தன் வயமாம் நிலை வேண்டும். அஃதீந்தார் ஆட்சியினர். ஆதலினால் நின்பணியை ஆர்வமுடன் ஆறுதலாய், அமைதியாய் எமக்காற்றி நீதிநெறி ஓம்பி நின் துணைவி மக்களுடன் ஆதிபரனார் அருளால் அவனியிலே நீடுநெடிதூழி நிலைத்து நீ வாழிய.

மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பழை,
*3-3-71*

இங்ஙனம்,
**விடுதி மன்றத்தினர்.**

✻

## FROM THE GOLDEN BOOK OF MAHAJANA

*I have profitted very much from the opportunity to visit the College this morning. I hope this will prove to be the first of a number of such occasions. Good luck to the College's A — Level Medical stream with whom I spent so enjoyable a time.*

— Leonard Tibbitts.

தெல்லிப்பழை
மகாஜனக் கல்லூரி அதிபராகவிருந்து ஓய்வுபெற்ற

## திரு. தெ. து. ஜயரத்தினம், ஜே. பி. அவர்களின்

37 வருட சேவை நலம் பாராட்டி

மகாஜனக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் (கொழும்புக் கிளை)
பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில்
18-9-1971 சனிக்கிழமை
நடாத்திய விழாவில் வழங்கிய

# பாராட்டுப் பா

### வெண்பா

சீர்சால் பணியாற் சிறந்தஜய ரத்தினமாம்
பேர்சால் அறிஞர் பெருஞ்சேவை — ஊராரே
பெற்றுர் எனவே பெருமின்பங் கொண்டிந்த
நற்பா மலரணிந்தோம் நாம்!

### விருத்தம்

சீர்வளரு மணியிலங்கைத் தீவிலொளிர் தெல்லிநகர்க் கொருவி ளக்காய்ப்
பேர்வளரும் மகாஜனக் கலைக்கோயில் பெறற்கரிய செல்வ மென்றே
கார்நிலவுங் குளிரோடுங் கதிர்பரவு மெழிலோடுங் களங்க மில்லா
வீரமுள வுளத்தோடு விரும்பியநற் பணியாற்றி உய்ந்த வீர!

செந்தமிழுஞ் சிவநெறியுந் திசைவெல்லத் தினமுழைத்தாய்! சிறுரை எண்ணிச்
சொந்தநலன் நினையாமல் சுகவாழ்வைத் தேடுகிற வியல்பில் லாமல்
வந்தபயன் பணிசெய்தல் என்றவொரு வளர்நினைவின் வழியே நின்ற
தந்தைதுரை யப்பவள்ளல் வழிநின்று தணியாத ஆவல் தீர்த்தாய்!

பழம்பெருமை வாய்ந்தசில பள்ளிகளின் பின்வந்தும் பணியால் உந்தன்
இளம்பள்ளி தழைத்தோங்க இதயமலர் இனமறியா உவகை யெய்த
வளம்பெருகி வனப்புடனே வளர்கலையும் விஞ்ஞான அறிவுந் தூண்டுங்
களம்அமைத்த கலையரசே! கல்வியெனுங் கடலளந்த பெரியோய், வாழி!

முத்தமிழே முதுசொமென முழுநாளும் முயன்றுழைத்த முதல்வ! எங்கள்
சொத்தெனவே நாம்மதித்துச் சேவைசெயுஞ் சிந்தைபெற வைத்தாய்! நாளும்
பத்தியுடன் நீவளர்த்த பள்ளியிலே பயிலுகிற பாலர் நெஞ்சம்
நித்தமுனை வாழவைக்கும்! நீளுலகில் நின்பெயரும் ஆளும், ஐய!

வையத்துள் வாழுகிற வகையறிந்து வளர்சேவை யுள்ளங் கொண்டுன்
கையாகி நின்றுதவிக் காலமெலாம உனதுணையாள் செய்த தொண்டு
பெய்யென்று வேண்டுகையிற் பெய்துவிடும் பெறற்கரிய மழையின் தொண்டு!
செய்யென்று தூண்டியுனைச் சேவைகளுக் கேவியபெண் தெய்வ மன்றே!

ஓர்எழுத்துக் கற்பித்தல் ஒப்பில்லாச் சேவையென உயர்ந்தோர் சொல்வர்!
நேர்வழியைக் கற்பித்தல் நீளுலகில் நின்றரசு செய்யு மென்பர்!
பார்புகழும் பண்புகளைப் பாலித்தல் பலவளமுஞ் சேர்க்கு மென்பர்!
சீர்வழியைக் கற்பித்தாய்! சிந்தைநிறைந் தின்புற்றுய்! சிறந்து வாழி!

## Second Eleven Soccer Champions J. S. S. A. – 1961



**Seated :** *Mr. P. Ehamparam, Mr. S. Pancharatnam, N. Jegatheeswaran (Captain), S. Viravanathan, The Principal.*

**Standing :** *S. Manickavasagar, P. Alfred Joseph, S. Sivanesan, S. S. Sivanesan, N. Ganeshamoorthy, K. Vinayagamoorthy, S. Thirugnanasampanthar, V. T. Mahalingam, K. Umamaheswaran, M. Sivanesan, R. Selvarajah.*

# Second Eleven Soccer Champions J. S. S. A. – 1962

SECOND YEAR IN SUCCESSION



**Seated:** *Mr. S. Pancharatnam, The Principal, R. Selvarajah (Captain), N. Jegatheeswaran, Mr. P. Ehamparam.*

**Standing:** *S. Jayanandan, M. Sivanesan, V. T. Mahalingam, N. Ganeshamoorthy, K. Vinayagamoorthy, V. Arumugam, K. Sathianathan, P. Alfred Joseph, K. Umamakeswaran, R. Jeganathan.*

## J. H. A. Champions — 1966



SECOND ELEVEN

## J. H. A. Champions — 1967



SECOND ELEVEN


N
1. The Main School
2 Class rooms
LANE
1
2
P.W.D. ROAD
1915


N
1. The Tshaped Main Building
2. Class rooms
3. Reading room
LANE
1
2
3
2
P.W.D. ROAD
1945



V.C LANE
Thatched Live Fence
Thatched Live Fence
K. Vairamuthu & others
Thambiah
K. Sinnathurai & others
N. Arumugam
Gate
Madawy Wall
P.W.D. ROAD
Vellavaikal
24
25
26
27

## Three Mahajanans in the C. S. F. A.

WON THEIR COLOURS IN 1969



*N. Vadeeveshwaran* *K. Mohanram* *S. Rajaratnam*

## All Ceylon Athletic Honours



*S. Sivarajah*

LAURELS FOR LONG JUMP




*K. Kandiah*

MADE HIS MARK IN THE MILE RACE

உ
சிவமயம்

தெல்லியம்பதி மகாஜனக் கல்லூரியில்
கால்நூற்றுண்டு காலம் அதியுன்னத அதிபராயிருந்து
அளப்பரிய கல்விப்பணி ஆற்றிய
சைவத் திருமகன்

# தெ. து. ஜயரத்தினம், B. A. (Lond.), J. P. அவர்கள்

ஒய்வுபெற்றது குறித்துப்
பழைய மாணவர்கள் மனமுவந்து அன்புடன் அளித்த

# பாமாலை

## ஆசிரிய விருத்தம்

திருமருவு தெல்லிநகர் உயர்சைவ வேளாளர் குலத்தில் எஞ்சாப்
பெருநிதியம் உயர்கல்வி நிறைந்தபெருங் குடியதனிற் பிறந்த பெம்மான்
சுருதிநவில் ஒழுக்கநெறி தவருதோன் பலகலையின் துறையுங் கற்றேன்
அரியேற்றின் திரமுடையான் துரையப்பா பிள்ளையென அழைக்கும் நாமன்.

சைவநெறி தழுவுபல மாணவர்கள் கலைபயின்று தழைத்தே யோங்க
மெய்வளரும் உளத்துன்னி மிகச்சிறிய கழகமொன்றை வினையின் முற்றிக்
கைவருநன் மாணவர்கள் களிகூர உயர்கலைகள் கற்பித் தோங்கு
அவ்வழியிற் பின்னுமோர் கழகத்தை அரனருளால் ஆக்கி ஞனே.

உயர்நிலையும் உயர்கலையும் உயர்ந்தபல ஆசிரியர் உள்ள தாகச்
செயிரறுநற் கல்லூரி நடவியபின் சின்னப்பா பிள்ளை யென்னும்
பெயர்படைத்தோன் அதிபதியாய்ச் சமாதானம் மேலோங்கப் பெருமை தங்க
நயமொழிசேர் பண்பினுடன் எல்லவருங் களிகூர நடாத்திப் பின்னர்;

பேரேறு துரையப்ப பிள்ளைஇனி தீன்றசுதன் பெட்பு மேயோன்
சீரேறு பலகலையுங் கற்றுணர்ந்த பேரறிவு சிறந்த வள்ளல்
நாரேறும் உள்ளத்தான் தெய்வபக்தி உண்மைநிலை நன்கு வாய்த்தோன்
பாரேறு புகழ்பரவ ஓங்குமுயர் நல்லொழுக்கம் படைத்த மேலோன்.

அடைந்தவரைக் காக்குமொரு அரியபெருங் குணமுடையோன் ஆக்கம் மிக்கோன்
மிடைந்தபெரும் பகைவரினும் அஞ்சாது முன்னின்று மீட்குந் தீரன்
திடம்நிறைந்த உள்ளத்தான் **செயரத்னம்** என்னுமொரு செல்வ நாமன்
இடம்பொருவும் அதிபராய்க் கல்லூரி மிகஓங்க எய்தி ஞனே.

எந்தையினும் இனியதொண்டு யான்செய்தல் வேண்டுமென இதயத் துன்னிச்
சிந்துவளை உலகமதில் வித்தியா தருமமே சிறந்த தென்ன
மூந்துபொருள் முழுவதையுந் தந்தையெனக் கல்லூரிக் களிக்கும் நீரான்
தந்தைதனக் காற்றுகடன் தந்தையினும் பெரியபுகழ் சார்த லென்றே.

ஆனந்த நடனமிடு நடராசப் பெருமான்நன் கமருங் கோயில்
மேனந்தா மேன்மாடி மண்டபங்கைப் பணியரங்கு விளையாட் டாற்றும்
கானத்தேர் தருவளையு முன்றில்விடு திச்சாலை கவின வாற்றிப்
பானம்பல் லுணவருந்தி மாணவர்கள் இளைப்பாறப் பாங்காம் அட்டில்;

மேலதாம் விஞ்ஞானம் பயில்கூடம் பண்ணியங்கள் விரும்பி யாங்கு
சீலமுற விலைபகரும் சாலையையும் இயற்றியிவை திறம்பா வண்ணம்
காலமறிந் திவையெல்லாம் நடைபெறற்காங் கரணமருள் கண்ய மிக்கோன்
கோலமுறும் இலங்கைநகர்ப் பல்கலையுங் கற்றிடவே கோரு வோர்க்கு.

உயர்தரமாம் வகுப்பொன்றை ஆக்கிஅவர்க் காங்கல்வி ஊட்டும் வள்ளல்
செயிரறுநற் **செயரத்னம்** எனுமதிபர் காலத்திற் செல்வ மேவப்
பயில்கலையாய் பீ. ஏ. யாம் பட்டமுற்றேர் பலர்டக்ரர் பதத்திற் பல்லோர்
மயல்தீருங் கணிதம்ஆய் இஞ்சினியர் பல்லோராய் வந்து ளாரே.

கத்துகடல் சூழிலங்கை நகர்மேவு மேலாய கழகந் தம்மோ
டொத்திலகும் உயர்பதத்தில் வைத்திடுமிக் கல்லூரி இகந்தா லுந்தன்
மெத்துபுகழ் விழைதருமம் நீங்காது செல்வமெலாம் மேவி வாழ்க!
தத்தைமொழி மனைமகார் தம்முடனே சுற்றமெலாந் தழுவி வாழ்க.

தெல்லிப்பழை
7-11-71

இங்ஙனம்
**பழைய மாணவ சங்கத்தினர்**

யாத்தவர்:
விழிசிட்டி, பண்டிதர் வே. பொன்னம்பலவன் அவர்கள்

❋

## FROM THE GOLDEN BOOK OF MAHAJANA

*I have had the pleasure of giving a talk in this College and see the working of the institution. It is one of the finest institutions I have seen in Ceylon. The students are well disciplined — the atmosphere is inspiring the teachers are deeply devoted. It is a pleasure to visit such a College and share ones thoughts with them.*

**N. Giridhara Prasad.**

உ

சிவமயம்

தெல்லியூர் மகாஜனக் கல்லூரியில்
இருபத்தைந்தாண்டு அதிபராயிருந்து அதனை நவமாக்கிய
கல்விப்பெருமகன்

## திரு. தெ. து. ஜயரத்தினம், B. A. (Lond.), J. P. அவர்கள்

இளைப்பாறியஞான்று
பெற்றோர்—ஆசிரியர் சங்கத்தினர் அகமுவந்து அளித்த

# வாழ்த்தியற் பாமாலை

*திணை* - பாடாண் *துறை* — வாழ்த்தியல்

மன்னியசீர்த் தெல்லிநகர் வளர்ந்தோங்கு கலைநியம வரையில் ஏறித்
துன்னுமிளங் கதிர்பரப்பிப் பானுபயில் காட்சியெனத் துலங்கு செம்மால்!
இன்மொழியால் நன்னடையால் இரும்புலமைப் பெற்றிமையால் இசைமேம் பாட்டால்
மன்னவருந் தலைபணியும் மாண்புபயில் செயரத்ன மகிப வாழி.

திசையெல்லாந் தெல்லிநகர்ச் செழும்பதியின் விரிபுகழே திகழ்ந்து கூட
வசையறியாத் துரையப்ப நுந்தைதரு கலைக்கோயில் வாழ்வு காண
அசைவறியா வூக்கமொடும் அரும்பணிகள் நனிகுயிற்றி அதிப னாகி
இசைபெருக்கு முரவோனே எழில்விரவு செயரத்ன ஏந்தல் வாழி.

அருங்கலையின் பேருணர்வால் ஆற்றலினால் மதிநலத்தால் அன்பர் யாரும்
திருந்துதமிழ்ப் பொதிகைமுனி இவனென்று மனமுவந்து செப்ப நின்றாய்
இருந்தனத்தைப் பேருழைப்பை மாசனக்கல் லூரிக்கே ஈந்தாய் நாளும்
கருந்தனமாய்க் கல்வியினைக் காத்துமகிழ் செயரத்னக் கலைஞ வாழி.

அரம்போலுங் கூர்மையரும் அவனிமிசைப் பண்பமையா அமைதி கொண்டால்
மரம்போல்வர் எனுமுரையை மறந்தேனும் பொய்த்தறியா மணியே நீதான்
உரந்திகழ மாசனக்கல் லூரிபெற்ற உயர்வெல்லாம் உன்னி உன்னிப்
புரந்திடுதாய் உள்ளமொடு பூரிப்பாய் செயரத்னப் புகழாய் வாழி.

தண்டமிழர் பொருநனெனத் தருக்கிநின்ற தலைமகனே தயையின் குன்றே
கொண்டலென மாணவகர் குழாங்களிப்ப அறிவமுதங் குழைத்து நல்கி
அண்டிவரும் ஆசிரியர் அவலமெலாம் அருத்திமிகத் துடைப்பாய் ஐய
கண்டுநிகர் மொழியானே காவலனே கற்பகமே களித்தே வாழி.

ஆசிரியர் குழாத்திற்கோர் அணிமதியே சைவநெறி அடைவு பேணும்
தேசிகனே நுண்கலைகள் சிறப்பெய்த வந்துபயில் செல்வ கேண்மோ
பேசுபுகழ் இலண்டனிலே பிறங்குதனிக் கழகத்தும் பெருமை பெற்றாய்
மாசகன்று சமாதான நீதிபதி வரிசைகொண்டாய் வள்ளால் வாழி.

கண்ணியமே கடமையொடு கட்டுப்பா டென்னவரு கவின்க ளானும்
திண்ணமொடு பிறர்பணிக்கே நினையுதவித் திளைத்துமகிழ் செம்மை யானும்
அண்ணலடி மறவாதிங் கான்றமைந்த மதிநலஞ்சேர் அமைதி யானும்
புண்ணியனே எல்லவரும் போற்றிமகிழ் நிலைபெற்றாய் பொலிந்து வாழி.

ஐயநின்றன் வாழ்வினிலே மங்கலங்கள் நிறைந்திடுக அமைதி மேய
தையலவள் தன்னோடு மதலைகளும் சால்பெல்லாம் செறிந்து வாழ்க
செய்யவளுஞ் செயமகளும் நினைத்தழுவிச் சிறப்பெய்தி மகிழ்க மன்னோ
வையமிசைப் பல்லாண்டு நலனோங்கிச் செயரத்ன வாழி வாழி.

தெல்லிப்பழை
7-11-71

இங்ஙனம்
பெற்றோர் - ஆசிரியர் சங்கத்தினர்

*யாத்தவர்* : செந்தமிழ்ச்செல்வர், பண்டிதர் க. மயில்வாகனம் அவர்கள்
வட்டுக்கோட்டை

உ
சிவமயம்

# தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின்

பெருமைநிறை அதிபராக

இருபத்தைந்து ஆண்டுகள் சேவைபுரிந்து இளைப்பாறிய

## திரு. தெ. து. ஜயரத்தினம், B. A., J. P.,

அவர்களைக் கௌரவித்து

சாரணரும், வழிகாட்டிபரும் வழங்கிய

# பாராட்டுப் பாமலர்

### பஃறுழிசைக் கொச்சகக் கலிப்பா

பார்கொண்ட வளம்பலவும் பரித்துயர்ந்து புகழ்வளர்த்துச்
சீர்கொண்ட செழும்பதியாய்த் திகழ்தெல்லிப் பழைநகரிற்
கல்வியொடு கலைத்தெளிவு கருதுசிவ நெறியொழுக்கம்
மல்கிநின்று புவிதழைப்ப மகாசனமா கழகமிதைத்
தந்துவந்த துரையப்பாத் தமிழ்க்கவிஞர் பெருமகனர்
முந்துசெயுந் தவப்பயனுய் மொழியவரு முதன்மகனே

நாவினிக்க உலகமெலாம் நவிற்றுஜய ரத்தினமாம்
பாவினிக்கும் பெயர்மருவிப் பலகலையின் துறைபடிந்து
கோலமிகு பொலந்தவிசிற் குலமணியொன் றுளிர்ந்ததுபோல்
நீலமலர்ச் சுனையகத்தோர் நிறைபதுமம் மலர்ந்ததென
ஆசிரியர் குலத்தினர்தம் அணியிதுவென் றகங்களிப்ப
மாசனமா கழகமிது மலர்அதிபர் ஆயினைநீ

ஐயைந்து வருடமிவண் அதிபரென அருளுடனே
வையநீ இயற்றுபணி வரம்பிகத்தல் அரிதலவே.

குறுநிலத்தோர் சிறுகழகம் குரவநின தருமுழைப்பால்
நிறைகலைகள் பலர்பயிலும் நிலைக்குயர்ந்த ததிசயமே

மதிவகுத்து நிதிபெருக்கி மனம்பதித்துக் கழகமிது
புதுவடிவு பொலிந்திடநீ புரிந்ததுவும் வியப்பாமே

அகலிடங்கொள் ஆய்கூடம் அருங்கலைகள் தருமரங்கு
தகவுடனே இயற்றியநின் தருமநெறி உயர்வாமே

தொழின்முறைகள் பயில்கூடம் சுவையுணவு தரும்விடுதி
எழின்மிகுநூ லகமிவைகள் இயம்பிடும்நின் திறமாமே

கொன்றையந்தார்ச் சடையுடையார் குலவுநடம் பயில்கோயில்
ஒன்றெடுத்துச் சிவநெறிநீ உயர்த்தியதும் நலமாமே

விண்ணுயர்ந்து மணிமாடம் விளங்குவதுந் தினமுமதிற்
பண்ணிசையுங் கலைக்களியும் பயில்வதும்நின் பரிவாமே

நாடகமும் விளையாட்டும் நடத்துபவர் தரும்பரிசுப்
பீடுநிலை மிகவடைந்தேம் பெருமையிதும் நினதாமே

சாரணியக் குழுவினராய்த் தனிச்சேவை தருபவராய்த்
தாரணியிற் புகழ்பெறுநம் தகவனைத்தும் நினவாமே

கடமைநிலை உணர்த்துதற்குக் கடுமைநிலை உணர்த்தாமல்
நடுவுநிலைக் குறிப்பினில்நீ நடத்தியதும் நயமாமே

பழையமுறை அதிகாரப் பயமுறுத்தல் தவிர்த்தெழில்சேர்
இளமுறுவற் துணையுடனி எமைப்புரந்த திசைவாமே

எழுபதின்மர் ஆசிரியர் இராயிரவர் மாணவர்கள்
தொழுதகைமை பெறுநின்றன் கெழுதகைமை பெரிதாமே

இங்கிவற்றால்,

அளக்க லாகா விழுப்பமிக் குடையையாய்க்
கிழக்கினில் வைகறை கிளத்திநின் றெழுதரும்
உதய தாரகை ஒளிர்ந்தென எங்களின்
இதய மீதுறும் இருள்கழித் துயர்ந்தனை
சாரணர் யாங்கள் சற்சனர் கூட்டமாய்ப்
பேரணிப் படையாய்ப் பிறங்கிடச் செய்தநின்
மாண்புகழ் ஏத்தி வாழ்த்தி நின்றனம்
ஈண்டினைப் பாறுதல் இயைந்தநீ யென்றும்
உய்திறம் போற்றி உயர்மனை மக்களும்
மெய்பெறு சுற்றமும் விரும்பிப் பணிசெய
நாடிய மாசன நடேசரின்
நீடருள் மலர நெடிதுநாள் வாழிய.

இங்ஙனம்
மகாஜனக் கல்லூரிச்
சாரணிய, வழிகாட்டிக் குழுவினர்

*தெல்லிப்பழை,*
*17-11-71.*

## FROM THE GOLDEN BOOK OF MAHAJANA

*I am very happy to have come up for the A/L Students' annual function. It has been a very stimulating experience.*

J – 12

# A QUARTER OF A CENTURY OF EVENTFUL STEWARDSHIP

**1945**: Mr. T. T. Jayaratnam is installed as Principal on 3-9-1945.

Inauguration of a Building Expansion Fund with a target of one lakh.

**1946**: All available land is cleared, a well right at the centre of the campus is filled and the foundation laid by the Founder for a house for himself at the northern most end, is demolished to provide a playground for the College.

The College enters the J. S. S. A. Soccer Tournament for the first time.

Facilities are provided for the teaching of Physics, Chemistry and Biology.

The present College Crest is designed.

The Colombo Branch of the Alumni is inaugurated.

The Principal is Hony. Secretary of the Northern Province Teachers' Association.

**1947**: Teaching of Science begins in right earnest.

Principal flies to India to select Science graduates. The first batch arrives in May.

The School is raised to Grade II status.

**1948**: H. S. C. Science classes are formed.

The Saraswathy Primary School is amalgamated with the College. There are classes now from the Kindergarten to the University Entrance.

Building project is started in a big way. Several classrooms spring up to cope with the rush for admissions.

**1949**: The College is raised to Grade I status.

The Principal is President of the Northern Province Teachers' Association.

**1950**: An earnest attempt is made to raise funds by bringing Film Stars from India. The Principal makes two trips to Madras in this connection.

**1951**: The College Song and the Flag Song take shape.

**1952**: The new Physics Laboratory is declared open.

Land is acquired on the northern side to extend the playground.

**1953**: The present Chemistry Laboratory is declared open.

More than half-an-acre of land is acquired for further expansion.

**1954**: A Carnival and Raffle is organised on a mammoth scale at the Jaffna Esplanade. The Hon'ble the Minister of Education declares it open. The participation of outstanding Indian Artistes makes it the show of the year. The carnival which extends to well nigh a month is an unqualified success. The Principal visits the four corners of the Island to push the raffle ticket sales. Proceeds exceed a lakh.

The College Hostel is started on a modest scale.

This is indeed the *Annus Mirabilis* of Mahajana College.

**1955**: The Foundation Stone is laid for the Golden Jubilee Block which is to include the Thuraiappahpillai Assembly Hall and the Library. The old T shaped building makes way for the new structure.

A king size workshop is built to provide courses in Wood work, Claywork, Coir-work and Weaving.

We are runners up at the J. S. S A. Athletic Meet.

We win the J. S. S. A. Second Eleven Soccer Championship.

Once again we acquire land on the North-eastern side for additional buildings.

**1956**: The present Biology Laboratory is opened.

We are runners-up at the J. S S. A. Athletic Meet for the second year in succession.

The Principal is Hony. Secretary of the Northern Province Principals Association.

